

அரசு முறைப் பயணமாக சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு செல்வதையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (23.05.2023) முகாம் அலுவலகத்தில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, கௌதம சிகாமணி எம்.பி., நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் டி.கே.எஸ்.இளங்கோவன், அண்ணா அறிவாலய மேலாளர் ஆர்.பத்மநாபன், அண்ணா அறிவாலய துணை மேலாளர் என்.ஜெயக்குமார் ஆகியோர் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.



சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கும் வகையிலும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கிலும், சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (23.5.2023) சிங்கப்பூர் விமான நிலையத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, சிங்கப்பூர் நாட்டிற்கான இந்திய தூதர் பெரியசாமி குமரன் ஆகியோர் மலர்கொத்து வழங்கி வரவேற்றார்கள். உடன் தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ். கிருஷ்ணன், ஆகியோர் உள்ளனர்.

### ஆண்டு முழுவதும்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை கொண்டாடுவோம்!

## தி.மு.க. விவசாய அணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, மே 24-

தி.மு.க. விவசாய அணி மாநில நிர்வாகிகள் கூட்டம் (21.5.2023) தி.மு.க. விவசாய அணி மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் 21.5.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணி அளவில், கோவை, கிஸ் கால் கிராண்ட் ஓட்டலில், விவசாய அணி துணைத் தலைவர் இரா. தமிழ்மணி தலைமையில், விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் வரவேற்புரையாற்றிட நடைபெற்றது.

இக்கூட்டத்தில் விவசாய இணைச் செயலாளர்கள் எஸ்.அப்துல்காதர், கள்ளிப்பட்டி மணி, மா. முத்துராமலிங்கம், குறிஞ்சி என்.சிவகுமார் - துணைச் செயலாளர்கள் ர்.டி.ஏ.ஆதிசேஷன், மதுரை ஆர்.கணேசன், கீழப்பாவூர் கு.செல்லப்பா, டி.எம்.அரியப்பன், கிருஷ்ணகிரி டேம் டி.வெங்கடேசன், இராமநாதபுரம் என்.நல்லசேதுபதி., கள்ளக்குறிச்சி த.சித்தார்த்தன், சூடப்பட்டி சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் விவரம் வருமாறு:

தமிழே உயிராக, தமிழினமே உணர்வாக, தமிழர் நலனும் தமிழ்நாட்டின் வளர்ச்சியுமே வாழ்நாள் செயல்திட்டமாகக் கொண்ட ஓய்வில்லாச் சூரியனும்தனது 94 ஆண்டு ஆயுட்காலத்தில் 80 ஆண்டுகால பொதுவாழ்க்கைக்குச் சொந்தக்காரரும் ஒரு நூற்றாண்டுகால திராவிட இயக்க வரலாற்றில் முக்கால் நூற்றாண்டுகாலப் பங்களிப்பாளரும் அரை நூற்றாண்டு காலம் கழகத்தின் தலைவராக இருந்து தமிழ்நாட்டு அரசியலின் அச்சாணியாக செயல்பட்டவரும் களம் கண்ட 13 தேர்தல்களிலும் வெற்றி கண்ட சாதனையாளரும் ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று மாநிலத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நலன் விளைவிக்கும் திட்டங் களை வழங்கியவரும் இந்திய ஜனநாயகக் காவலராகத் திகழ்ந்த மூத்த அரசியல் தலைவரும் இலக்கியம் கவிதை இதழியல் நாடகம் திரைப்படம் எனத் தொட்ட துறைகள் அனைத்திலும் வெற்றி முத்திரை பதித்த பன்முகத்திறன் கொண்ட படைப்பாளரும் - தான் ஆட்சிக் கட்டிலில் முதலமைச்சராக அமர்ந்த போதெல்லாம் தமிழ்நாட்டு விவசாயிகளின் நலனை முன்னிருத்தி, அவ்விவசாயிகளுக்காக இலவச மின்சாரம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை வகுத்து, விவசாயிகளின் பாதுகாவலனாக இருந்தவரும் உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்தவருமான நம் 'தமிழினத் தலைவர்' கலைஞர் அவர்களின் நூற்றாண்டு 2023 சூன் 3ஆம் நாள் தொடங்க வுள்ளதையொட்டி;

நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை எழுச்சியோடும் உணர்ச்சியோடும் எங்கெங்கும் நடத்திட வேண்டுமென தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தி.மு.க. உயர்நிலை செயல்திட்டக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானத்தின்படி;

சூன் 3அன்று வட சென்னையில் நடைபெறும் தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாப் பொதுக் கூட்டத்திலும்;

சூன் 20ஆம் நாள் திருவாரூரில் எழிலுற அமைக்கப் பட்டுள்ள கலைஞர் கோட்ட திறப்பு விழாவிலும்;

2023 சூன்3 தொடங்கி, 2024 சூன் வரை ஓராண்டு காலத்திற்குத் தொடர்ச்சியான நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு நடத்திடவும்;

"ஊர்தோறும் தி.மு.க." எனும் தலைப்பில், கிளை அளவில் இருக்கும் நமது பழைய கொடிக் கம்பங்களைப் புதுப்பித்து, புதிய இருவண்ணக் கொடியேற்றிடவும்;

"எங்கெங்கும் கலைஞர்" என்ற அடிப்படையில், கலைஞரின் முழு உருவச் சிலை, மார்பளவு சிலைகளை அமைப்பதற்கான முயற்சிகளில் கழக விவசாய அணியினர் ஈடுபடுத்திக் கொள்ளவும்;

"கழகமே குடும்பம்" எனும் தலைப்பில், பொற்கிழி வழங்க ஏற்பாடு செய்வதில் கழக விவசாய அணியினர் சிறிய அளவிலாவது பங்கேற்றிடவும்;

"என்றென்றும் கலைஞர்" எனும் தலைப்பில், கருத்தரங்கம், பொதுக்கூட்டம் போன்ற நிகழ்வுகளில் தி.மு.க. விவசாய அணியின் மாநில நிர்வாகிகள் மற்றும் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு;

தமிழ்நாடு முழுவதும் "தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா"வினை தி.மு.க. விவசாய அணி மிகச் சிறப்பாக எழுச்சியுடன் கொண்டாடிட இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### தமிழ்நாட்டில் வளர்ச்சி, நலத்திட்டப் பணிகளை கண்காணிக்க

# மாவட்ட வாரியாக பொறுப்பு அமைச்சர்கள் நியமனம்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, மே 24-

தமிழ்நாட்டில் வளர்ச்சிப் பணிகளை விரைவுபடுத்தவும், நலத்திட்டப்பணிகளை கண்காணிக்கவும் மாவட்ட வாரியாக பொறுப்பு அமைச்சர்களை நியமனம் செய்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அரசாணை விவரம் வருமாறு:

மாவட்ட வளர்ச்சிப் பணிகளை துரிதப்படுத்தவும், பொதுமக்களுக்கு சென்றடைய வேண்டிய நலத்திட்ட உதவிகளை கண்காணிக்கவும், இயற்கைச் சீற்றம், நோய்த் தொற்று மற்றும் இன்ன பிற நேரங்களில் அவசரகால பணிகளை கூடுதலாக மேற்கொள்ளவும் வருவாய் மாவட்ட வாரியாக அமைச்சர்கள், பொறுப்பு அமைச்சர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சரும், கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் அமைச்சருமான ஆர்.காந்தி, திருவள்ளூர் மாவட்ட பொறுப்பு அமைச்சராக நியமனம் செய்யப்படுகிறார்.

திருவாரூர் மாவட்ட பொறுப்பு அமைச்சரும், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சருமான அர.சக்கரபாணி, கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சராக நியமனம் செய்யப்படுகிறார்.

மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களின் பொறுப்பு அமைச்சரும், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சருமான சிவ.வீ.மெய்யநாதன் மயிலாடுதுறை மாவட்டத்திற்கு மட்டும் பொறுப்பு அமைச்சராக செயல்படுவார்.

சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, நாகப்பட்டினம் மாவட்ட பொறுப்பு அமைச்சராக நியமனம் செய்யப்படுகிறார்.

சேலம் - கே.என் நேரு; தேனி - ஐ.பெரியசாமி; திருப்பத்தூர் மற்றும் கள்ளக்குறிச்சி - எ.வ.வேலு; தருமபுரி - எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்; தென்காசி - கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன்; ராமநாதபுரம் - தங்கம் தென்னரசு; காஞ்சிபுரம் - தா.மோ.அன்பரசன்; திருநெல்வேலி - ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்; கோயம்புத்தூர் - செந்தில்பாலாஜி; பெரம்பலூர் - எஸ்.எஸ்.சிவசங்கர் மற்றும் தஞ்சாவூருக்கு அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் பொறுப்பு அமைச்சர்களாக நியமிக்கப் பட்டுள்ளனர்.

வருவாய் மாவட்டங்களுக்கு பொறுப்பு அமைச்சர்களாக நியமனம் செய்யப்பட்ட அமைச்சர்கள், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள் (District Monitoring Officers ) மற்றும் அனைத்து துறைகளைச் சார்ந்த அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து, திட்டப் பணிகளை துரிதப்படுத்துதல், நலத்திட்ட உதவிகள் பொதுமக்கள் சென்றடைவதை கண்காணித்தல் மற்றும் தேவையான ஆலோசனைகள் வழங்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது என்று அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.





